SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY

Centre for
Research on
Successful Ageing

செய்திக்கடிதம் - இதழ் 01

ஆகஸ்டு 2020



சிங்கப்பூர் லைஃப் பேனல் (Singapore Life Panel, SLP) தொடங்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகின்றன! ஆகஸ்டு 2020 கருத்தாய்வு, குழுவின் தொடர்ச்சியான 60வது மாதாந்தரக் கருத்தாய்வாகும். இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். எங்கள் கருத்தாய்வுகளுக்குப் பதிலளித்துள்ள உங்களின் அற்புதமான ஆதரவில்லாமல் இந்த மைல்கல்லை எங்களால் அடைந்திருக்க முடியாது. உங்கள் அனைவரின் அர்ப்பணிப்புக்கும் மிக்க நன்றி.

கல்வியாளர்கள் மற்றும் ஆதரவுப் பணியாளர்கள் அடங்கிய ஓர் சிறிய குழுவால் தொடங்கப்பட்ட சிங்கப்பூர் லைஃப் பேனல் (SLP), தற்போது 12,000 பேர் கொண்ட குழுவாக வளர்ச்சி அடைந்துள்ளது. இது ஓய்வுபெற்ற அல்லது பணி ஓய்வை நெருங்குகின்ற சிங்கப்பூரர்கள் பற்றிய தகவல்களின் தனித்துவமான தரவுத்தளத்தை உருவாக்கியுள்ளது. இது ஒரு 'சராசரி' சிங்கப்பூரரின் பிம்பம் அல்ல, இது பலதரப்பட்ட மக்களையும், வாழ்க்கையின் இந்த முக்கியமான கட்டத்தில் உருவாகியுள்ள அவர்களின் பல்வேறு சூழ்நிலைகளையும் கூட்டாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிநபர்களின் ஓர் விரிவான வரலாறாகும். நிதிசார் சொத்துக்கள், வருமானம், செலவு, வேலைவாய்ப்பு, ஆரோக்கியம், வீட்டுவசதி, அகநிலை நல்வாழ்வு மற்றும் பிற குணாதிசயங்கள் பற்றிய முக்கிய தகவல்களுடன், இது பணி ஓய்வுக்கான தயார்நிலை, சார்ந்துள்ள மக்களிடையே உள்ள அதன் மாறுபாடு மற்றும் வேலையின்மை, உடல்நலக் குறைவு அல்லது புதிய அரசாங்கத் திட்டங்கள் போன்ற புதிய நிகழ்வுகளால் அது எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய தகவல்களை வெளிக்கொண்டு வந்துள்ளது. அவ்வப்போது சேர்க்கப்பட்ட, அதாவது, மிகச் சமீபத்தில் உலகளாவிய கொவிட்-19 கிருமித்தொற்று பரவலின் போது சேர்க்கப்பட்ட பல சிறப்பு தொகுதிக்கூறுகளானது நிதிசார் கல்வியறிவு, அரசாங்கப் பரிமாற்ற திட்டங்கள், குத்தகைத் திரும்ப வாங்குதல் திட்டம், நீண்டகாலப் பராமரிப்பு காப்புறுதி மற்றும் புற்றுநோய்ப் பரிசோதனை போன்ற பல்வேறு தலைப்புகளைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கியுள்ளன. ஆரோக்கியம் மற்றும் பணி ஓய்வு தொடர்பான இந்தத் தலைப்புகள் ஆராய்ச்சியாளர்களுக்கு அல்லது கொள்கை வகுப்பாளர்களுக்குக் குறிப்பாக ஆர்வமாக உள்ளன, மேலும் இவை தகவல் மற்றும் நுண்ணறிவுகளின் நேரடி ஆதாரமாக SLP-இன் மதிப்பை விளக்குகின்றன.

# முன்னோக்கிய பார்வை - அடுத்த 5 ஆண்டுகள்



இது எங்கள் நிலையத்திற்குப் பெரும் நிலைமாற்றத்திற்கான காலமாகும். உங்கள் அர்ப்பணிப்பு முயற்சிகளுக்கு மிக்க நன்றி. நாங்கள் இப்போது 60 கருத்தாய்வு மாதங்களை முடித்துள்ளோம், அவற்றில் 2,000 -க்கும் மேற்பட்ட மாறுபட்ட கேள்விகளுடன் அரை மில்லியன் கருத்தாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. உங்கள் மதிப்புமிக்க தரவுகளானது மூப்படைகின்ற மற்றும் பணி ஓய்வு பெறுகின்ற மக்களின் பொருளாதாரம் குறித்த எங்கள் விரிவான ஆராய்ச்சிக்கு அதிகாரம் அளித்துள்ளது.

எங்களின் அருமையான பதிலளிப்பவர்களால் உருவாக்கப்படும் உலகத் தரம் வாய்ந்த தரவுகளை அங்கீகரிக்கும் விதமாக, சிங்கப்பூர் லைஃப் பேனலை குறைந்தபட்சம் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செயல்பட கல்வி அமைச்சிலிருந்து தாராளமான ஆதரவைப் பெற்றுள்ளோம்.

உயர் தரமான ஆராய்ச்சி மூலம் வயதான சிங்கப்பூரர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதே எங்கள் முக்கிய குறிக்கோளாக இன்னும் இருக்கும். சிங்கப்பூரில் வெற்றிகரமாக மூப்படைவதைப் பற்றிய முழுமையான தோற்றத்தை உருவாக்க, மூப்படைகின்ற மக்களின் பொருளாதாரத்தில் நாங்கள் உருவாக்கியுள்ள நிபுணத்துவம் உடல், மனம் மற்றும் சமூக நல்வாழ்வின் கூறுகளுடன் ஒன்றிணைக்கப்படும்.

இதைப் பிரதிபலிக்கும் விதமாக, நாங்கள் வெற்றிகரமான முதுமைக்காலம் குறித்த ஆராய்ச்சி நிலையம் (Centre for Research On Successful Ageing, ROSA) என பெயர் மாற்றப்படுகிறோம். மேலும், SMU-இல் உள்ள பொருளாதாரம், சமூகவியல் மற்றும் உளவியல் துறைகள், டியூக்-NUS -இல் உள்ள முதுமைக்கால ஆராய்ச்சி மற்றும் கல்வி நிலையம், NUS-இல் உள்ள கொள்கை ஆய்வுக் கழகம் மற்றும், RAND முதுமை ஆய்வுக்கான ஆராய்ச்சி மையம் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இருந்து பலதரப்பட்ட ஒத்துழைப்பாளர்களால் ஆதரிக்கப்படும் எங்கள் புதிய கொள்கை ஆய்வாளரான பேராசிரியர் பவுலின் ஸ்ட்ராகனின் (Paulin Straughan) புதிய தலைமையுடன் நாங்கள் எங்கள் அணியைப் புதுப்பிக்கிறோம்.


உங்கள் நல்வாழ்வு, சமூக மற்றும் குடும்ப வாழ்க்கை, பராமரிப்பு வழங்குதல் மற்றும் பெறுதல், உளவியல்சார் நடவடிக்கைகள் மற்றும் இன்னும் பல புதிய தலைப்புகளின் அம்சங்களை ஆராய்வதற்கான கூடுதல் தொகுதிகளை நாங்கள் களமிறக்கத் தொடங்கும் போது கருத்தாய்வுக் கேள்விகளில் சில மாற்றங்கள் இருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள்! பல பதிலளிப்பாளர்கள் கூடுதல் பற்றுச்சீட்டு கொடுப்பனவுகளைக் கோரியிருந்தனர். அதனால், புதிய அட்டவணையில் ஆகஸ்டு மற்றும் பிப்ரவரி கருத்தாய்வுகளுக்குப் பிறகு $40, நவம்பர் மற்றும் மே மாதக் கருத்தாய்வுகளுக்குப் பிறகு $20 மற்றும் பிற எல்லா மாதங்களிலும் $10 மதிப்பிலான பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆகஸ்டு மாதத்தில் எங்கள் கருத்தாய்வை முடிக்க நீங்கள் முதலில் உள்நுழையும்போது, இந்தத் தகவலை இன்னும் விரிவாக விளக்கி, இந்த முக்கியமான திட்டப்பணியில் தொடர்ந்து பங்கேற்க உங்களை அழைக்கும் தகவலறிந்த ஒப்புதல் படிவம் உங்களுக்கு வழங்கப்படும். இந்தப் புதிய பயணத்தைத் தொடங்க நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம், நீங்கள் எங்களுடன் தொடருவீர்கள் என்று ஆவலுடன் நம்புகிறோம்!

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY


# கொவிட்-19 குறித்த முக்கிய கண்டுபிடிப்புகளின் சாராம்சம்

## வீட்டில் இருந்து வேலை செய்யும் போதான உற்பத்தித்திறன்





தற்போதைய உலகளாவிய கொவிட்-19 கிருமித்தொற்று பரவலின் போது, நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதைக் கண்காணிக்க நாங்கள் பலதரப்பட்ட கேள்விப்பட்டியல்களை உங்களிடம் கேட்டு வருகிறோம். எங்களின் மொத்தக் குழுவிலும், வீட்டுச் செலவுகள் சராசரியாகக் கால் பங்கு அளவுக்குக் குறைந்துவிட்டன. வேலை நேரம் குறைந்துவிட்டது, வேலைவாய்ப்பு வருமானத்தில் சராசரியாக 6% இழப்பு ஏற்பட்டுள்ளது. பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யும் போது தங்கள் உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதாக எங்களிடம் கூறுகிறார்கள்; 13% மட்டுமே தங்களது உற்பத்தித்திறன் அதிகமாக இருப்பதாக நினைக்கிறார்கள்.

## கொவிட்-19 நிலைமையை அரசாங்கம் கையாளும் விதத்தில் உங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது?




மேற்கூறியவை அனைத்தையும் மீறி, கொவிட்-19 கிருமித்தொற்றுக்கான அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை மீதான நம்பிக்கை தொடர்ந்து வலுவாக உள்ளது. பதிலளித்தவர்களில் முக்கால்வாசி பேர் அரசாங்கத்தை 'ஓரளவு' அல்லது 'முழுமையாக' நம்புகிறார்கள்.




பொது முடக்கத்தின் போது, வழக்கமாக வேலைசெய்கின்ற ஓர் பதிலளிப்பவர் 7 மணிநேரம் தூங்கியுள்ளார், 5 மற்றும் அரை மணி நேரம் (ஐந்தரை மணிநேரம்) வேலை செய்துள்ளார். அன்றாடப் பராமரிப்புப் பணிகளில் சராசரியாக ஒன்றரை மணிநேர வீட்டு வேலைகள், 45 நிமிட சிறு சிறு வெளிவேலைகள், 45 நிமிட தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் 30 நிமிட உடற்பயிற்சி ஆகியவை அடங்கும்! ஒரு வழக்கமான பதிலளிப்பவர் டிவி/திரைப்படங்களைக் கண்டுகளிப்பதற்கு 2 மணிநேரம் 20 நிமிடங்களையும், சமூக ஊடகங்கள், வாசித்தல் மற்றும் குடும்பத்தினர்/நண்பர்களுடன் உரையாடுதல் ஆகிய நடவடிக்கைகளுக்குத் தலா ஒரு மணிநேரமும் செலவிட்டுள்ளார். ஒவ்வொரு நாளும் சராசரியாக 80 நிமிடங்கள் சாப்பிடுவதற்குச் செலவிட்டுள்ளார்!

துரதிர்ஷ்டவசமாக, சமூக மற்றும் குடும்ப வாழ்க்கை, அன்றாட நடவடிக்கைகள், பொருளாதார நிலைமை மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கை ஆகியவற்றுடனான திருப்தி நிலை உள்பட, பலரது நல்வாழ்வு கடந்த சில மாதங்களில் வியத்தகு முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால், இந்தச் சவாலான காலகட்டத்தில் கூடுதல் ஆதரவு தேவைப்படலாம் என்று நாம் கருதுபவர்களை அணுகி உதவ நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

கொவிட்-19 தொடர்பான எங்களின் கண்டுபிடிப்புகள் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், தயவுசெய்து பின்வரும் எங்கள் இணைத்தளத்தைப் பார்வையிடுங்கள்: **https://rosa.smu.edu.sg**.


SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY

# நமது புதிய இயக்குநர் மற்றும் முதன்மை ஆய்வாளர்

பேராசிரியர் பவுலின் ஸ்ட்ராகன் (Paulin Straughan) அவர்கள் சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் துறை முதல்வராக மட்டுமின்றி, சமூகவியல் பேராசிரியராகவும் (பயிற்சி) இருக்கிறார். இதற்கு முன்னதாக, இவர் 1991 முதல் 2017 வரை சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக இருந்தார், அங்கு இவர் துணைத் துறை முதல்வராகவும் இருந்தார்.

பேராசிரியர் ஸ்ட்ராகன் பவுலின் அவர்கள் எங்களின் புதிய 'வெற்றிகரமான முதுமைக்காலம் குறித்த ஆராய்ச்சி நிலையத்தில்' (ROSA) இயக்குநர் பதவியை வகிப்பதோடு, குழந்தைப்பருவ உடல் பருமனுக்கு வழிவகுக்கும் சுற்றுச்சூழல் காரணிகளை ஆய்வு செய்துவரும் திட்டப்பணி போன்ற பல ஆராய்ச்சி முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். சமீபத்தில் இவர் சிங்கப்பூர், சியோல் மற்றும் ஷாங்காயில் வெற்றிகரமான முதுமைக்காலம் குறித்த திட்டப்பணியின் முதன்மை ஆய்வாளராக இருந்தார். இத்திட்டப்பணியில் பல நிறுவனங்களும் பலதுறைக் குழுவும் ஈடுபட்டிருந்தன. பேராசிரியர் ஸ்ட்ராகன் கூடுதலாகத் திருமணம் மற்றும் பெற்றோர்நிலைக் கருத்தாய்வு உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட பல திட்டப்பணிகளில் ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.

பேராசிரியர் ஸ்ட்ராகன் சிங்கப்பூரர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு, ஆராய்ச்சி நுண்ணறிவுகளைக் கொள்கைத் தாக்கங்களாக மாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளார். ROSA-இல், மூப்படைவர்களின் சமுதாயம் சிங்கப்பூரில் அதிவேகமாக அதிகரிப்பதால் மூத்தோர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், வெற்றிகரமான முதுமைக்காலத்தை ஊக்குவிப்பதற்கும் வழிகளைக் கண்டுபிடிப்பது அதில் அடங்கும். குழு பதிலளிப்பாளர்கள் வழங்கும் மதிப்புமிக்க கருத்துக்களைக் கொண்டு, முதுமைக்காலப் பொருளாதார நிலை குறித்த ஆராய்ச்சி நிலையத்தில் (CREA) மேற்கொள்ளப்படும் பணியைத் தொடர்வதற்கும், மூப்படையும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்க சிங்கப்பூருக்கு உதவிட ROSA-வின் கீழ் அதை புதிய உச்சம் தொட வைப்பதற்கும் அவர் குறிக்கோள் கொண்டுள்ளார்.



# கருத்தாய்வுகளின் தேதிகள்

- **ஆகஸ்டு மாதக் கருத்தாய்வு: 1 - 24 ஆகஸ்டு 2020**
- **செப்டம்பர் மாதக் கருத்தாய்வு: 1 - 24 செப்டம்பர் 2020**
- **அக்டோபர் மாதக் கருத்தாய்வு: 1–25 அக்டோபர் 2020**

# இரகசியக்காப்பு மற்றும் உங்களின் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் அளிக்கின்ற தகவல்களை நாங்கள் சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு, தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) -இன் கீழ் மிகுந்த இரகசியத்துடனும், முழுமையான இணக்கத்துடனும் வைத்துக்கொள்வோம். எங்களுடைய சர்வர்கள் மற்றும் இணையத்தள உலாவிகளுக்கு இடையிலான தரவுப் பரிமாற்றங்கள், உயர் பாதுகாப்பைக் கொண்ட புரொட்டகால்களைப் பயன்படுத்திக் கையாளப்படுகின்றன. மேலும், எங்களுடைய டொமைனில் ஒரு SSL சான்றளிப்பு நிறுவப்பட்டுள்ளது. உங்களின் தனிப்பட்ட தரவுகளும் கருத்தாய்வுப் பதில்களும் தனித்தனியாக சர்வர்களில் வைத்துக்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம், நீங்கள் வழங்கும் தரவுகளைக் கொண்டு உங்களை அடையாளம் காண முடியாது. அடையாளம் நீக்கப்பட்ட தரவுகள் மீது தான் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. ஒற்றைக் கவனிப்பாய்வுகள் மீது ஒருபோதும் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த அடையாளம் நீக்கப்பட்ட தரவுகள் SMU-ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. சேகரிக்கப்படும் முடிவுகள் ஆராய்ச்சி நோக்கங்களுக்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் மற்றும் புள்ளிவிவரங்களாகத் தெரிவிக்கப்படும். உங்கள் விவரங்கள் வர்த்தக நோக்கங்களுக்காகப் பிற அமைப்புகளுடன் ஒருபோதும் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது.

# எங்களை தொடர்பு கொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY